R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
November 2021

## தூத்துக்குடி கிறிஸ்துவின் சபையில் சகோதரிகள் கூட்டம்



"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்
தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு
சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" - ரோமர் 8:28

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202. Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 நவம்பர் 2021 கனி 12

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## Gospel Preaching On Television

| Language | Channel | Day | Time |
|---|---|---|---|
| HINDI | Shubhsandesh Channel | Tuesday & Sunday | 7.00–7.30 P.M. |
| | | Friday | 8.00–8.30 P.M. |
| | Speakers: Sunny, Francis, & Vinay David | | |
| TELUGU | Subhavartha Channel | Sunday | 6.00 P.M. |
| | Rakshana Channel | Wednesday | 6.30 P.M. |
| | Rakshana Channel | Thursday | 11.00 A.M. |
| | Aradhna Channel | Saturday | 6.30 A.M. |
| | Satyavani T.V. online: www.sakthitv.in | Wednesday & Friday | 8.00 P.M. |
| | Kanthi TV in A.P. only | Every day | 7.30 A.M. & 3.30 P.M. |
| | MAHA News Channel | Friday | 6.30 A.M. |
| | Speakers: Joshua & Ricky Gootam | | |
| TAMIL | Nambikkai T.V. | Saturday | 8.00–8.30 P.M. |
| | Tamilan T.V. | Tuesday | 6.00–6.30 P.M. |
| | Speaker: Arjunan | | |
| TAMIL | Tamilan T.V. | Saturday | 7.00–7.30 A.M. |
| | Nambikkai T.V. | Friday | 7.30–8.00 A.M. |
| | Speaker: Rajanayagam | | |
| TAMIL | Tamilan T.V. | Sunday | 7.00–7.15 A.M. |
| | Nambikkai T.V. | Sunday | 3.30–4.00 P.M. |
| | Joy T.V. | Saturday | 9.00 P.M. |
| | Salvation T.V. (In English) | Sunday | 2.00 P.M. |
| | Speakers: Philemon & Kingsley | | |
| Malayalam | Jai Hind Channel | Saturday | 6.00–6.30 A.M. |
| | Speaker: P.K. Varghese | | |

TO RECEIVE VOICE OF TRUTH MAGAZINE
Contact Cell No. 9244204420 or 9244214421

| Language | Channel | Day | Time |
|---|---|---|---|
| MARATHI | MCN News Channel (Aurangabad) | Mon., Wed., Friday | 7.30-8.00 A.M. |
| | Speaker Amul Bansod | | |
| KUKI (Manipur) | T.C. Network | Monday | 6.30-7.00 P.M., |
| | Speaker: Thang Lien | Wednesday | 6-7 P.M., |
| | | Friday | 6-7 A.M. |





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 255

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. ஞானியின் கண்கள் எதிலே இருக்கிறது?
2. இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் எதினாலும், எதினாலும் முடிசூட்டப்பட்டார்?
3. பரிதானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு என்ன நடக்கும்?
4. ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தியபோது எதினாலே நீதிமானாக்கப்பட்டான்?
5. அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது என்றவன் யார்?
6. அழிந்துபோகிற பொன் எதினாலே சோதிக்கப்படும்?
7. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன் என்ற தீர்க்கன் யார்?
8. பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய பிள்ளைகள் எப்படிப்பட்டவர்கள்?
9. துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேணும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று எவர் சொல்லுகிறார்?
10. அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் யாராயிருக்கவில்லை?

## வேதாகம ஆய்வு... 40

## ஏகூத்
## Ehud



1. பலமுள்ளவன் என்று அர்த்தம்.
2. பென்யமீன் கோத்திரத்தான்
3. இவன் இடது கை வழக்கமானவனுமாயிருந்தான்
4. கர்த்தர் இஸ்ரவேலுக்காக ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப்பண்ணினார் – நியா.3:15
5. இருபுறமும் கருக்குள்ள ஒரு முழ நீளகத்தியை உண்டுபண்ணினான் – நியா.3:16
6. மோவாபின் ராஜா எக்லோனுக்கு ஒரு முடிவுகட்டினான் – நியா.3:21
7. இவன் மரித்தபின்பு திரும்ப இஸ்ரவேலர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தார்கள் – நியா.4:1

## முதல் தண்டனை - The First Panishment

சிறுவர் பகுதி



ஹலோ, குட்டீஸ்! எப்படியிருக்கீங்க? தேவன் முதன் முதலாக உண்டாக்கின மனுஷனும், மனுஷியும் யார் தெரியுமா? அவங்க தான் ஆதாமும் ஏவாளும் அவங்களை தேவன் தம்முடைய சாயலாக ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இவங்கள, ஏதேன் என்ற ஒரு சந்தோஷமான தோட்டத்திலுள்ள எல்லா கனிகளையும் புசியுங்க, ஆனா நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மட்டும் புசிக்காதீங்க என்று அங்கே எந்த வேலையும் செய்யாம, ஜாலியாக இருக்கும்படி அந்தத் தோட்டத்திலே வைத்தாரு. ஆனா, இந்த ஆதாமும் ஏவாளும் நம்மைப்போலவே கீழ்ப்படியல, தேவன் எதை சாப்பிடக்கூடாது என்று சொன்னாறோ, அந்த கனியைப் பறித்து புசித்து விட்டாங்க அவ்வளவு தான்! தேவனுக்குக் கோபம் வரும் தானே. உடனே தேவன் அவங்கள தோட்டத்தை விட்டே விரட்டி விட்டாரு.

அதுமட்டுமா செஞ்சாரு, நீ இந்த தோட்டத்துக்குள்ளே வரக்கூடாது என்று சொல்லி, தோட்டத்தைக் காவல் செய்ய சுடரொளி பட்டயத்தை வச்சிட்டாரு. அவ்வளவு தான், நல்லா, வேலை எதும் செய்யாம ஜாலியாக அங்கேயிருந்த எல்லா பழங்களைப் பறித்து சாப்பிட்டுக்கொண்டிருந்த ஆதாமும் ஏவாளும் பெரிய சாபத்துக்கு உள்ளாயிட்டாங்க. தேவன் அவங்கள பார்த்து, இனிமேல், ஆதாமே நீ இந்த பூமியிலே நெற்றிவியர்வை சிந்தி, நல்லாபாடுபட்டு வேலை செஞ்சு தான் சாப்பிடணும் என்று சொல்லிட்டாரு அப்புறம் ஏவாளையும் பார்த்து நீ பிள்ளை பெறும் போது மிகவும் கஷ்டப்பட்டு, வேதனையோடு தான் குழந்தையைப் பெற்றெடுக்கணும் 'நான் புசிக்க வேண்டாமென்று சொன்ன கனியைப் புசித்தீங்க எனக்குக் கீழ்ப்படியாம பாவம் செய்து விட்டீங்க உங்களாலே எல்லா மனுஷருக்கும் பாவம் வந்துருச்சு. மனுஷரை பாவத்திலிருந்து விடுதலை செய்ய இயேசு என்ற இரட்சகர் பிறப்பாருணு அப்பவே சொல்லிட்டாரு. நீங்க உயிரோடிருக்கும் நாளெல்லாம் ரொம்ப கஷ்டப்படுவீங்க என்று சொன்னதுமல்லாம, இவங்கள ஏமாற்றின சர்ப்பத்தையும் சபித்து விட்டாரு. பின்பு, அதைப் பார்த்து என்ன சொன்னாரு தெரியுமா? "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவர் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் அவர் (இயேசு) உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதியாகமம் 3:15). பார்த்தீங்களா, தம்பி தங்காய்! முதல் மனுஷன் ஆதாமும் முதல் மனுஷி ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாததால் இவ்வளவு பெரிய தண்டனை! இப்படித்தான் சில சமயங்களில் நம்ம அப்பா அம்மாவுக்கு, டீச்சருக்குக் கீழ்ப்படியாமல் போயிட்டா நமக்கும் தண்டனை கிடைக்கிறது. அதனால் நாம் தேவனுக்குக் கீழ்ப்படியணும், அப்பா அம்மாவுக்கும் கீழ்ப்படியணும் பெரியவங்க சொல்லறதையும் கேட்கணும். அப்போது தான் சந்தோஷமா இருக்க முடியும். தண்டனையும் கிடைக்காது. OK வா குட்டீஸ்? Bye, Bye! அடுத்த மாதம் சந்திப்போமா?

**மனப்பாடவசனம்**

**"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய (இயேசுவுடைய) கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்"– ரோமர் :19**



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 நவம்பர் - 2021 கனி - 12

ஆசிரியருரை

## உங்களை ஒப்புக்கொடுங்கள்
## Submit Yourselves



**பு**திய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்த ஒரு சில சகோதரர்களையும் சகோதரிகளையும் பற்றி இவ்வேளையிலே தியானிக்கவுள்ளோம். லேவி என்ற மத்தேயு, இவன் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தை எழுதியவன். இந்த லேவி என்பவன் கர்த்தருடைய ஊழியத்திற்காக தான் தெரிந்து கொள்ளப்பட்டபோது, அதை பெரும் பாக்கியமாக கருதினான். அவன் வரிவசூலிப்பவனாக இருந்தான். இயேசு அவனை அழைக்கும்போது அவன் தனக்குள்ள எல்லாவற்றையும் விட்டு அவருக்குப்பின் சென்றான். இந்த நற்செய்தியின் நிமித்தமாக "அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்துபண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள்" (லூக்.5:29). இவன் எவ்வளவு சந்தோஷமுள்ளவனாயிருந்தால் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடுசெய்திருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நம்மில் எத்தனைபேர் கர்த்தருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுத்தவுடன் இந்தவிதமாக சந்தோஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுகிறோம்? நம்முடைய வீட்டில் புதிதாக ஒரு குழந்தைபிறந்துவிட்டால் மகிழ்ச்சியில் சாக்லெட் வாங்கிக் கொடுக்கிறோம். நாம் பரீட்சையில் பாஸ் பண்ணிவிட்டால் ஏதோ ஒரு இனிப்பு வாங்கிக்கொடுக்கின்றோம். ஆனால் ஞானஸ்நானம் பெற்றவர்களும், கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களும் இந்த மத்தேயுவைப்போல ஒரு பெரிய விருந்தை ஏற்பாடுசெய்கிறார்களா? செய்வதில்லை. ஆனால் தனிப்பட்ட விதத்தில் இந்த விதமாக சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வதில்லை. ஒரு பள்ளியில் ஆசிரியருக்கு பதவி உயர்வு கிடைத்துவிட்டால் அன்று அவர் எல்லா ஆசிரியர்களுக்கும் பிரியாணி வாங்கிகொடுக்கிறார். இதில் ஆசிரியர்களுடைய தகுதிக்கு ஏற்ப சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ளுகிறார்கள். கர்த்தருடைய வேலை என்பதுஉலகத்தில் உள்ள எல்லா வேலைகளைக்காட்டிலும் சிறப்பானது அதற்கு நிகரான வேலை இந்த உலகத்தில் எதுவுமில்லை என்பதை அறிந்த லேவி என்ற மத்தேயு அவனோடு உள்ள அனைவரையும் அழைத்து ஆண்டவர் இயேசுவுக்கு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தினான். இதைப்போல பழைய ஏற்பாட்டு காலத்தில் எலிசா என்பவன்

தன் ஏர்மாடுகளை அடித்து விருந்து செய்து எலியாவின் பின்னே ஊழியத்திற்கு சென்றான் எனக் காண்கிறோம்.

மேலும், புதிய ஏற்பாட்டு காலத்தில் குறிப்பாக இயேசுவின் நாட்களில் "ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்" (லூக்.8:3). ஆண்டவர் இயேசு அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்துகொண்டு வந்த நாட்களில் அவருடைய ஊழியத்திற்கு பணம் தேவையாக இருந்திருக்கும். அந்த தேவைகளை அவருடைய உபதேசத்தினால் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களில் யோவான்னாள், சூசன்னாள் போன்றவர்கள் தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்தார்கள். ஊழியத்திற்கு வேண்டிய பணத்தை ஆண்டவர் இயேசு, தேவனுடைய உபதேசத்தின் மூலமாகவே பெற்றுவந்தார். இன்றைய நாட்களில் ஊழியத்திற்கு பணம் மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. அதை யார் கொடுப்பார்? எங்கே கிடைக்கும் என்று அங்கும் இங்கும் அலையும் ஒரு கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தில் அந்த ஊழியத்திற்கு தேவையானதை அவரோடு கூட இருந்த சீஷர்களும் சீஷிகளும் கொடுத்து தாங்கியிருக்கிறதை நாம் வசனங்களின் வாயிலாக அறிகிறோம். இப்படி ஆண்டவருக்கும் அவருடைய உபதேசங்களுக்கும் தங்ளை ஒப்புக்கொடுக்கக்கூடிய சகோதர, சகோதரிகள் சபைகளில் எழும்பவேண்டும்.

அதைப்போல தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்த ஒரு பாவியாகிய ஸ்திரீயைக்குறித்துப்படிக்கிறோம். "அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்.7:38). இவள் தான் ஒரு பாவி என்பதை அறிந்து தன்னை முழுவதுமாக தாழ்த்தி இயேசுவின் முன்பு நிற்பதற்கு தான் தகுதியற்றவள் என்பதை எண்ணி இயேசுவின் பின்பாக நின்றுகொண்டு அழுது, தன்னுடைய பாவத்தை கண்ணீரால் அவருடைய பாதங்களில் ஊற்றி பரிமள தைலத்தினால் நனைத்து தன்னுடைய கூந்தலினால் அவைகளை துடைத்தாள். அவளுடைய கீழ்ப்படிதலையும், மனமாறுதலையும் கண்டு கர்த்தர் அவளை மன்னித்து இனி பாவம் செய்யாதே என்று அனுப்பிவிட்டார். அழைத்த பரிசேயன்; அவருக்கு, கால்களை கழுவ தண்ணீர் தரவில்லை, ஆனால் இவளோ இயேசுவின் மீது கொண்ட அன்பினால் அவருடைய பாதங்களை பரிமளதைலங்கொண்டு பூசினாள். இவள் ஆண்டவருக்கு செலுத்தின பரிமளதைலம் மிகவும் விலையேறப்பெற்றது. ஒரு சாதாரண தைலத்தை கொண்டு வந்து இயேசுவுக்கு பூசும்படியாக இவள் நினைக்கவில்லை. மிகவும் விலையேறப்பெற்ற தைலத்தை அவருக்கு பூசவேண்டும் என்று எண்ணினவளாக பரிசேயனுடைய வீட்டிற்கு வந்து இயேசுவை சந்தித்தாள். அவளுடைய ஒப்புக்கொடுத்தலைப்பார்த்தீர்களா? உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப்பட்டதாக இருக்கிறது? உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட நீங்கள் அவருக்குச் செலுத்தப்போகும் காரியம் எப்படிப்பட்டது? முதலாவது உங்களையே அவருக்கு ஒப்புக்கொடுங்கள், பின்பு உங்களுடைய உடைமைகளை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். வானமும் பூமியும் கர்த்தருடையது.

இயேசுவின் நாட்களில் திரளான ஜனங்கள் தம்மை பின்பற்றுவதை அறிந்த கர்த்தர் அவர்கள் சாப்பிடாமல் அவருடைய உபதேசங்களை கேட்பதை



நம்மை வைத்து இவர் பிழைப்பு நடத்துகிறார் என்றெல்லாம் உங்கள் இருதயம் எண்ணுமானால் அதை சரிசெய்து கொள்ளுங்கள். இயேசுவின் சீஷர்களைப் போல சிந்திக்காதீர்கள். **நீங்கள் எதைச் செய்தாலும், மனுஷருக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்** (கொலோ.3:24). மனுஷரைப் பாராமல், கர்த்தரைப் பாருங்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவத்திலிருந்து என்னை மீட்டுள்ளாரே அவருக்காக நான் எதையும் செய்வேன் என்று கூறுங்கள். அவர் உங்களிடத்தில் பிரியமாயிருப்பார்.

அடுத்ததாக, இந்த ஸ்திரீ இயேசுவினிடத்தில் நற்கிரியை செய்வதில் முந்திக்கொண்டாள் என வாசிக்கிறோம். இவள் தன்னால் இயன்றதை மட்டும் செய்யவில்லை. இயேசு கூறும்போது "நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள் என்றார். ஆம், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களைப் போக்கும் கிருபாதார பலியாக, சிலுவையில் அறையப்பட்டு மரிக்கப்போகும் முன் இவள் இயேசுவின் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள். அன்பு சகோதரிகளே, ஸ்திரீகள் பொதுவாக தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினரை மிக அன்பாக உபசரிப்பார்கள். அவர்களுக்கென்று செய்யவேண்டிய காரியங்களைச் செய்வதற்கும் முந்திக் கொள்ளுவார்கள். இது நம்முடைய இயல்பு. இந்த ஸ்திரீயும் கூட விலையுயர்ந்த தைலம் (இது நம்பமுடியாத விலையாகக் கருதப்படுகிறது) இதைத் தலையில் ஊற்றினால் வீணாகக் கீழே வழிந்தோடுமே என்று நினைக்கவில்லை. இது என் இயேசுவுக்கு நான் பூசும் தைலம், இது சிறப்பானதாக இருக்க வேண்டும். அவருக்குச் செலுத்துவதற்கு அதிக விலை ஒன்றும் பொருட்டல்ல என்றெல்லாம் நினைத்திருக்கக் கூடும். எனவே தான் ஆண்டவர் இயேசு அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, அவருடைய சரீரத்தில் தைலம் பூச முந்திக்கொண்டாள்.

மேலும் இயேசு இவளைக் குறித்துச் சொல்லும்போது; "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்.14:9). எப்பேர்பட்ட பாக்கியம் இது! உலகத்தில் எங்கெல்லாம் இச்சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவளை நினைப்பதற்காக இவள் செய்த நற்கிரியையும் சொல்லப்படும் என்று இயேசு உறுதியளித்திருக்கும் போது இது இந்த ஸ்திரீக்குக் கிடைத்த பெரிய பரிசல்லவா? ஆம், எப்படி ஆபேலின் காணிக்கையைக் குறித்து தேவன் சாட்சிபகர்ந்து, அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் என்று ஆவியானவர் திருவுளம் பற்றியுள்ளாரோ அதைப்போலவே இயேசுவும் இவளது நற்கிரியைக் குறித்து பேசி, உலகமெங்கும் இந்த சுவிசேஷம் செல்லுமிடமெங்கும் இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

ஆம், அன்பான சகோதரிகளே, கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பூரண மனதுடனும் அன்புடனும் அளவில்லாமல் கொடுப்போம், அதை வீண்செலவு என்று கடுகளவும் எண்ணாமல் எதைச் செய்தாலும் மனுஷருக்கென்று செய்யாமல், நம்மால் இயன்றதை, சிறப்பானவற்றை கர்த்தருக்கென்று செய்வோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

தரித்திரர் எப்போதும் நம்மைச் சுற்றி இருக்கின்றனர். எப்போது வேண்டுமானாலும் அவர்களுக்கு உதவிசெய்யலாம். நமக்கோ பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பது இப்போதைய தேவையாயிருக்கிறது.

மேலும், தைலம் பூசின இந்த ஸ்திரீயைக் குறித்துப் பார்க்கும்போது, "....விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, **அதை உடைத்து,** அந்தத் **தைலத்தை அவர் சிரசின்மேல், ஊற்றினாள்**" என மாற்கு 14:3 குறிப்பிடுகிறது. இந்த ஸ்திரீ ஏற்கனவே பயன்படுத்திய மீதமுள்ள தைலத்தைக் கொண்டுவராமல், இயேசுவுக்கென்று புதிதான விலையேறப்பெற்ற தைலத்தை அங்கே தானே உடைத்து அவர் சிரசின்மேல் ஊற்றினாள் என வாசிக்கிறோம். இயேசுவின் மேல் கொண்ட இவளுடைய அன்பு எவ்வளவு பெரியது! அன்று "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி.11:4) என்று வாசிக்கிறோம். அற்புதமான நிகழ்வு இது! தேவனே சாட்சிகொடுத்தார் என்பது அற்புதமல்லவா! இந்த ஸ்திரீயைக் குறித்தும் ஆண்டவராகிய இயேசு "என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள் என சாட்சி பகருகிறார் (மத்.26:10; மாற்.14:6). `She has done a good work' கிரேக்க மொழியில் நல்லது என்ற வார்த்தைக்கு இரு பொருளுடைய வார்த்தைகளாக 'மனந்திரும்புதலுக்கான நற்செயல்' என்றும் 'அழகான செயல்' என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்த ஸ்திரீ இயேசுவால் தான் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதினால் தன் அன்பினை வெளிப்படுத்தும்படி அழகாகச் செய்துள்ளாள். கிரேக்க வழக்கத்தின்படி விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு கால்களை கழுவ தண்ணீர் தர வேண்டும், தலைக்கு பூசுவதற்கு எண்ணெய் தரவேண்டும் இவளோ விலையேறப்பெற்ற புதிதான தைலத்தினால் இயேசுவின் சிரசை அபிஷேகம் பண்ணுகிறாள்.

மேலும், இயேசு, இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்றார். ஆம், அவளால் என்ன செய்யமுடிந்ததோ அதை மாத்திரம் செய்தாள். தேவன் யாரையும் எந்தக் காரியமும் செய்யும்படி கட்டாயப்படுத்துகிறவரல்ல. தேவனுக்கு நாம் செலுத்தும் காணிக்கையினைக் கூட பார்வைக்காகவோ, பெருமைக்காகவோ செய்யாமல் மனவிருப்பத்தின்படி செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறார். "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி.9:7) என்று வேதம் சொல்லுகிறது. ஒரு ஏழை விதவையைக் குறித்து மாற்.12:42-44-ல் "...ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் (இயேசு) சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ... தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். பாருங்கள், நாமும் கூட கர்த்தருக்குச் செலுத்த வேண்டியதில் விசனமடையக்கூடாது, இந்த ஊழியருக்கென்ன, சகல வசதியுடன், கார், பங்களாவோடு வாழ்கிறார் இவருக்கு வெளியிலிருந்து ஏகப்பட்ட பணம் வருகிறது



அறிந்து, அவர்களுக்கு உணவு கொடுக்கும்படி சீஷர்களை கேட்டுக்கொண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் இத்தனை திரளான ஜனங்களுக்கு வேண்டிய உணவு எங்கே கிடைக்கும் என்று சொல்ல ஆரம்பித்தனர். உங்களிடம் என்ன இருக்கிறது என்று கேட்கும்போது, "இங்கே ஒரு சிறுபையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்" (யோவா.6:9). அதை வாங்கி ஆசீர்வதித்துகொடுத்தார். ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்களும் ஸ்திரீகளும் சாப்பிட்டு மீதமானதை பன்னிரெண்டு கூடைகள் நிறைய எடுத்தனர். அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஆண்டவர் இயேசு கேட்டவுடன் அந்த சிறுபையன் அதை சீஷர்களிடம் கொடுத்தான் அல்லவா அதை நினைக்கும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதினால் தான் ஆண்டவர் இயேசு சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வர இடங்கொடுங்கள் என்றாரோ! என்று எண்ணத்தோன்றுகிறது. பாருங்கள் சிறுபிள்ளைகளுக்குக்கூட கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் அந்த பையன் கொடுத்தபடியினாலே அங்கே அநேகர் சாப்பிட்டு திருப்தியடைந்தனர். புதிய ஏற்பாட்டு காலத்தில் இந்த சிறுபையனும் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறான் என்றால் அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்களுடைய பிள்ளைகளை இந்த விதமாக கொடுக்கும் விஷயத்தில் பழக்கப்படுத்துகிறீர்களா? மேலைநாடுகளில் உள்ள சபைகளில் பிள்ளைகளும் அதிகமாக கொடுக்கும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் உள்ள கர்த்தருடைய சபைகளிலும் கொடுக்கும் பழக்கம் உருவாகவேண்டும்.

இயேசுவின் உபதேசங்களை அதிகமாகக் கேட்ட குடும்பங்களில் மார்த்தாளின் குடும்பமும் ஒன்று. ஒருநாள் "அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்" (யோவா.12:2). தேவ ஊழியர்களை உபசரிப்பதில் ஒரு தனி கவனத்தை மார்த்தாள் பெற்றிருந்தாள். அதுவும் ஆண்டவர் இயேசுவுக்கு உபசரிப்பதில் அவளுடைய பங்கு அதிகமாயிருந்தது. இப்படி பணிசெய்யும்படியாக ஒப்புக்கொடுத்தவர்களைப்பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். மேலும், யோசேப்பு என்று சொல்லக்கூடிய ஒரு சீஷன் இயேசுவின் சரீரத்தை எடுத்து துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி "தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப்போனான்" என்று மத்.27:60 வசனங்களில் படிக்கிறோம்.

இந்த காலத்திலும் கல்லறை பெரிய பிரச்சனையாகவே இருக்கிறது. இதனால் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்ளக்கூட தயங்குகின்றனர். இயேசுவை ஏற்றுக்கொண்டால் ஊரைவிட்டு ஒதுக்கிவைத்துவிடுவோம் என்று பயமுறுத்துகிறவர்களும் இருக்கிறார்கள். அப்படி ஏற்றுக்கொண்டால் எங்களுடைய அடக்க ஸ்தலத்தில் நீங்கள் அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறவர்களும் உண்டு. இதே சூழ்நிலை இயேசுவின் நாட்களில் இருந்திருக்கக்கூடும். மேலும் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. ஆகையால் யோசேப்பு தான் வெட்டிய கல்லறையிலே இயேசுவின் சரீரத்தை கொண்டுபோய் வைத்தான் எனக் காண்கிறோம். இவர்களெல்லாரும் இயேசுவின் உபதேசத்தினாலே தங்களையும், தங்களுடைய உடைமைகளையும் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தார்கள். உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப்பட்டது?.

தொற்காள் என்று சொல்லப்படும் தபீத்தாள் நற்கிரியைகளை மிகுதியாய் செய்துவந்தாள் என்று அப்.9:36-ல் படிக்கிறோம். தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக என்ற வசனத்தை கைக்கொள்ளுகிறவளாக இருந்தாள். நமக்கு இந்த வசனம் தெரியும், கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் தெரியும் ஆனால் யார் இதைக் கைக்கொள்ளுவது? தொற்காளைப்போல இயேசுவுக்கும் அவருடைய உபதேசங்களுக்கும் ஒப்புக்கொடுத்தவர்கள் செய்கிறார்கள். நீங்களும் செய்யும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். மேலும் "சகோதரரே, ஸ்தேவானுடைய வீட்டார் அகாயாநாட்டிலே முதற்பலனானவர் களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே" என்று பவுல் கொரிந்து சபையாருக்கு கடிதம் எழுதுகிறார் (1கொரி.16:15). அப்படியானால் இந்த ஸ்தேவானின் வீட்டார் முதல் நூற்றாண்டு சபையில் மாதிரியான குடும்பமாகவும், தங்களை கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்த குடும்பமாகவும் செயல்பட்டிருக்கிறார்கள் எனக் காண்கிறோம். சூழ்நிலைகளை அறிந்து சபை வளர்ச்சியடைய உதவியாயிருந்திருக்கிறார்கள். நீங்களும் அவ்விதமாக இருக்க முயற்சியுங்கள்.

ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தவர்களில் பவுலும் ஒருவர். அவர் "தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்" என அப்.28:30,31-வசனங்களில் படிக்கிறோம்.

தேவாலயங்களிலும், சந்தைகளிலும், மேடைகளிலும், கடலோரங்களிலும் கிடைக்கக்கூடிய வீடுகளிலும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்துக்கொண்டுவந்த பவுல் கடைசிநாட்களில் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி தானே சமைத்துக்கொண்டும் தன்னுடைய வேலைகளைக் கவனித்துக்கொண்டும் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு தடையில்லாமல் ராஜ்யத்தை குறித்து பிரசங்கித்திருப்பாரென்றால் அவருடைய வைராக்கியத்தை பார்த்தீர்களா? இது ஆண்டவர் இயேசுவின் மீது கொண்ட அன்பு அல்லவா?

**ஒப்புக்கொடுத்தலில் மாதிரியாக கொடுக்கப்பட்ட சபையார் யார்?**

புதிய ஏற்பாட்டு காலத்தில் மக்கெதோனியா சபையார் மாதிரியானவர்கள் என பவுல் சொல்லுகிறார். "அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கும் அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (2கொரி.8:1,2,5).

நீங்கள் கூடி வருகிற சபை மக்கெதோனியா சபையாரைப்போல கொடுத்தலிலே மாதிரியான சபையாக இருக்கிறதா? அப்படியில்லையென்றால், கொடுத்தலில் இந்த சபையாரை நோக்கிப்பாருங்கள். அவர்களை பெலப்படுத்தினவர் உங்களையும் பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

## இந்த வீண்செலவு என்னத்திற்கு?

**To What Purose Is This Waste?**

*-Glory Arjunan*



கிறிஸ்துவுக்குள்ளான அன்பின் சகோதரிகள் யாவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த வீண்செலவு என்னத்திற்கு? இந்தக் கேள்வியை எழுப்பியவர்கள் யார் தெரியுமா? இயேசுவோடு உண்டு, உறங்கி, ஊழியஞ்செய்து வந்த சீஷர்கள் தான்! அநேகக் குடும்பங்களில் ஸ்திரீகள் பொக்கிஷதாரிகளாகவும், வரவு செலவு கணக்குப் பார்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். இவ்விதமான பொறுப்பினை வகிக்கும் நீங்கள் கர்த்தருடைய ஊழியத்திற்குக் கொடுத்து உதவுவதை வீண்செலவு என்று எண்ணினதுண்டா? இங்கே "இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தக் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள். அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து, இந்த வீண்செலவு என்னத்திற்கு? இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள்" (மத்.26:6-8). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தங்களுடைய கண்களுக்கு முன்பாக எப்பேர்பட்ட அற்புதங்களைச் செய்துள்ளார்! மரித்தோரை உயிரோடெழுப்பினார், வியாதியஸ்தர்களை சுகமாக்கினார், பிசாசின் பிடியிலிருந்தவர்களையும், பாவத்தின் பிடியிலிருந்தவர்களையும் விடுதலையாக்கினார், கடலின்மேல் நடந்தார். இப்படி அவர் செய்த அற்புதங்களைப் பட்டியலிடுவோமானால் காலம் போதாது. "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாக செய்தார்" (யோவா.20:30). இவைகளெல்லாவற்றிற்காகவும் நன்றிசெலுத்தும்படி நாம் அவருக்கென்று செலுத்த இந்த உலகத்தின் பொருட்கள் ஈடாகுமா? எதுவும் ஈடாகாது. ஆனால் சீஷர்களோ இயேசுவின் மேன்மையை மறந்தவர்களாக இதை வீணாக எண்ணியுள்ளனர்.

மேலும் "இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள்" (மத்.26:9). இவ்வசனங்களை வாசிக்கும்போது எனக்கு மிகவும் வருத்தமாகயிருந்தது. ‘உனக்காக மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?’ என்ற சப்தம் அடிக்கடி என் காதுகளில் தொனிப்பது உண்டு. மேலும் இதைக்குறித்து யோவான் குறிப்பிடும்போது "அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்" (யோவா.12:4-6) என்று குறிப்பிடுகிறார். உங்கள் வீட்டின் பொக்கிஷதாரியாக, பணப்பொறுப்பினைக் கொண்டிருக்கிற நீங்கள் இதைக்குறித்து சிந்திக்கும்படியாக வேண்டுகிறேன்.

## வேத அறிவுப்போட்டி 252-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. 40 | - யோசு.14:7 |
| 2. இயேசு | - யோவா.3:7 |
| 3. ஆம் | - நியா.2:10 |
| 4. இயேசு | - அப்.2:24 |
| 5. போவாஸ் | - ரூத் 4:11 |
| 6. இல்லை | - ரோம.9:8 |
| 7. யோனத்தான் | - 1சாமு.14:6 |
| 8. பவுல் | - 1கொரி.6:12 |
| 9. தாவீது | - 2சாமு.12:15 |
| 10. பவுல் | - 2கொரி.12:18 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 2. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 3. E. அதிசயம் | - பனைகுடி |
| 4. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 5. S. ஜாய் சந்திரகாந்தா | - நல்லூர் |
| 6. J. ஆலிவ் | - கோவை |
| 7. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 8. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 9. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 10. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 11. Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 12. Sis.D. விஜய காந்தி | - கூத்தம்பாக்கம் |
| 13. J. மேரி ஜெயக்குமார் | - மதுரை |
| 14. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 15. Mrs. பாலின்மார்ட்டின் | - சிவகங்கை |
| 16. Mrs. ஜெபா நியூட்டன் | - திருநெல்வேலி |
| 17. S. அசோக்குமார் | - தூத்துக்குடி |
| 18. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 19. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 20. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 21. Mrs. ருக்மணி ஜெயசீலன் | - பண்ணைப்புரம் |
| 22. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 23. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 24. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 25. Mrs. ஜேன்தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 26. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 27. T. ராஜாத்தி | - கோம்பை |
| 28. Miss. சாந்தா தேவி | - பண்ணைப்புரம் |
| 29. Bro. ஹோசியாஹரிராகவன் | - சென்னை |
| 30. Miss. ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 31. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 32. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 33. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 34. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 35. Mrs. ஜெயபாணிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 36. D.A. கமலம் | - காரைக்குடி |
| 37. Mrs. ஃபிராங்களினா ஜான் | - ஊட்டி |
| 38. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 39. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 40. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 41. Mrs. ஞானசிரோன்மணி | - மதுரை |

## வேத அறிவுப்போட்டி 253-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. அதோனியா சாலொமோனுக்கு | - 1இரா.1:50 |
| 2. வெளியரங்கமாயிருக்கிறது | - கலா.3:11 |
| 3. எசேக்கியா | - 2இரா.20:15 |
| 4. இயேசுகிறிஸ்து | - எபே.3:11 |
| 5. நியாயமும், நீதியும் | - 1நாளா.18:14 |
| 6. ஜீவ வசனத்தை | - பிலி.2:4 |
| 7. யெரொபெயாம் | - 2நாளா.11:15 |
| 8. இயேசுகிறிஸ்து | - கொலோ.1:16 |
| 9. செக்கனியா, எஸ்றா | - எஸ்றா 10:4 |
| 10. பாத்திரராய் | - 1தெச.2:11 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. S. செல்வராஜ் சாலமோன் | - திருநெல்வேலி |
| 2. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 3. Miss. ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 4. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 5. S. ஜாய் சந்திரகாந்தா | - நல்லூர் |
| 6. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 7. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 8. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 9. J. ஆலிவ் | - கோவை |
| 10. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 11. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 12. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 13. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 14. Mrs. ஃபிராங்களினா ஜான் | - ஊட்டி |
| 15. T. ராஜாத்தி | - கோம்பை |
| 16. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 17. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 18. A. ஆலிஸ்குணசீலி | - சாயர்புரம் |
| 19. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 20. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 21. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 22. J. மேரி சுமித்தா | - மதுரை |
| 23. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 24. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 25. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 26. S. தங்கபுஸ்பம் | - நாசரேத் |
| 27. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 28. Mrs. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 29. Mrs. ஜெயபாணிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 30. Mrs. சந்திராஆல்பட் | - திருநெல்வேலி |
| 31. R. ராஜம்மாள் | - சென்னை |
| 32. Mrs. ருக்மணிஜெயசீலன் | - பண்ணைப்புரம் |

## ஜெபியுங்கள்



- நமது தேசத்திற்காக...
- நமது மாத இதழுக்காக...
- விசுவாச குடும்பங்களுக்காக...
- டிசம்பர் மாத கூட்டங்களுக்காக...
- கர்த்தருடைய ஊழியர்களுக்காக...

**தமிழ்நாடு கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான சிறப்பு கூட்டம்**
**நாள்: டிசம்பர் 8-ம் தேதி புதன் கிழமை**
**இடம்: வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்**
**கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்**
**Cell:9443558041 & 6379350509**
**பதிவு கட்டணம் ரூ100/-**



# பரலோகம் உண்டென நாம் ஏன் நம்புகிறோம்?

## Why We Believe In Heaven?

-J.C.Choate



**நான்** பரலோகத்தைப் பற்றி பேசும்போது, நான் வானத்தையோ, மேகங்களையோ அல்லது சுற்றுச் சூழலைப் பற்றியோ பேசவில்லை. நான் முழு வான்வெளியைக் குறித்தும்கூட பேசிக் கொண்டிருக்கவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளை பரலோகத்திற்கு ஒப்பிடுகின்றோம், ஆனால் நான் நினைக்கின்ற பரலோகமானது தேவன் வாசஞ்செய்கின்ற இடமாகும். பக்தியுள்ள ஆத்துமாக்கள் நித்தியத்தைக் கழிக்கும் ஒரு அழகான இடம், நீதிமான்களின் இருப்பிடம். பரலோகமானது தேவனுடைய வார்த்தையில் புதிய எருசலேமாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வேதவாக்கியங்கள் பரலோகத்தைப் பற்றிபேசுகிறது. நீதியினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவானவர், "சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்.5:12) என்றார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (லூக்.11:2). அவர் அவர்களுக்கு, "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்.6:20,21) என்று அறிவுறுத்தினார்.

கிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரனென்று அப்போஸ்தலர்கள் அறிக்கையிட்ட பிறகு அவர்களிடம், "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத்.16:19). கர்த்தர் தாம் போகும் சகலபட்டணங்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே அனுப்பிய எழுபது பேரை நோக்கி: "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்.10:19,20).

தொடர்ந்து அவர் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமென அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.15:7). இது கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவர் எனவெளிப்படுத்துகிறது (யோவா.3:13). இயேசு சீஷர்களுக்கு வானத்திலிருந்து வந்த அப்பத்தைப் பிதாவானவர் கொடுக்கிறார் எனக் கூறுகிறார் (யோவா.6:32). பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு

அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்'' (2கொரி.5:1) என்றார். மீண்டும் கலாத்திய சபை கிறிஸ்தவர்களுக்கு, ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'' (கலாத்.1:8) என்றான். சில நாளில் தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும் கர்த்தர் வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு உறுதிப்படுத்தினார் (2தெச.1:7-9). பேதுரு, ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது'' (1பேது.1:3,4) என்றான். யோவான், பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது'' (வெளி.21:1,2) என்றான். பரலோகம், தேவனுடைய நித்திய வாசஸ்தலம் மேலும் ஆத்துமாவின் வீடு என்பனவற்றைப் பற்றிய வேத பகுதிகள் சிலவற்றை தொடர்ச்சியாக நாம் காணலாம்.

பரலோகத்திற்கு யார் செல்லுவார்கள்? இந்த நாளைக்குறித்து இயேசு ஜனங்களுக்கு, ''நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத்.18:3) என்றார். இதன் அர்த்தமானது, குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகள் அல்லது பொறுப்புள்ள வயதை அடையாதவர்கள், மேலும் அவர்கள் நல்லது கெட்டதை அறியாதிருக்கிறபடியினால், தங்களுடைய செயல்களுக்கு உத்திரவாதிகளாகயிராதபடியினால், அவர்கள் மரிக்கும் போது பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று அர்த்தமாகிறது. கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் காக்கப்பட்டிருக்கும். பவுல், ''அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்'' (1கொரி.15:24) என்றான். சரீரம் அல்லது சபைக்குக் கிறிஸ்து இரட்சகராயிருக்கிறாரென எபேசியர் 5:23-ல் வாசிக்கின்றோம் (கொலே.1;18; அப்.20:28). இது ''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் ...'' கர்த்தர் நிறுத்திக்கொள்வார் எனச் சுட்டிக் காண்பிக்கக் கூடியதாக இருக்கிறது (எபே.5:27). கர்த்தர் எவ்வாறு தம்முடைய தூதர்களை அனுப்பி தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அழிக்கும்படிக்கு அக்கினிச் சூளையிலே போடுவார்கள் என்பதை மத்தேயு13:41-ல் வாசிக்கிறோம். தவிர சபையானது பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ள போகுமானால், அதன் பொருள் நாம் நித்திய



புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்''. இவ்வசனங்கள் விவாகம் தேவன் திட்டமிட்ட முன்னேற்பாடாயிருக்கிறது என்பதை தெளிவாக விளக்குகின்றன. தலைவனாகக் கருதப்படும் புருஷனானவன் குடும்பத்தில் அன்புகூருகிற தலைவனாயிருக்கும்போதும், மனைவி தன் புருஷனிடத்தில் அன்புகூர்ந்து பயபக்தியாயிருக்கும் போதும், எல்லாவகையிலும் தங்களை 'ஒரே' மாம்சமாக மாற்றுவதற்கு ஒப்படைக்கும் போதும், அவர்கள் ஒரு சீரிய, உயர்ந்த உறவினைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உலகத்தில் மிகக் குறைந்தவர்களே ''பூரணமாக இருக்கின்றனர். இருவேறுபட்ட மக்களுடைய இணைப்பு-ஒவ்வொருவரும் தோற்றத்திலிருந்து வேறுபாடு, ஏனென்றால் ஒருவர் ஆண் இன்னொருவர் பெண்-மேலும், ஏற்றுக்கொள்ளுதல், அவர்கள் ஒரு முழுமையில் இருபாதியாக இருக்கும்படி நிச்சயிக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் முழுமையானது உண்மை, தொடர்ச்சியான அன்பு, மன்னிக்க முயல்வது போன்றவற்றின் மூலம் மட்டுமே போய்ச் சேருகிறது.

அவர்கள் வித்தியாசமான சூழல்களையும், வித்தியாசமான மதிப்பீடுகளையும், இலக்குகளையும், மேலும் வித்தியாசமான சமய அர்ப்பணிப்புகளையும் கூட கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனுபவமின்மையையும், முதிர்ச்சியடையா நிலையினையும் கூட விவாகத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இந்த எல்லாக் காரியங்களும் பிரச்சனைகளுக்கும், தவறான புரிந்துகொள்ளுதலுக்கும், மனவேதனைகளுக்கும் காரணமாகி, முடிவாக நிதானமான, ''திருமணம் போராட்டத்திற்கு தகுதியுடையதா?'' என்ற வினா எழுப்பவும் செய்கிறது.

இன்று பலர் விவாகத்தை 'எழுதலும் வீழ்தலும்' ஆன பலபரீட்சையைப் போல எண்ணுகின்றனர். விவாகம் ''செயல்பட'' வில்லையென்றால் பிறகு விவாகரத்து என்பது எளிதான தெரிந்து கொள்ளுதலாயிருக்கிறது. இவ்விதமான நினைவு ஒப்புக்கொடுத்தலின் அஸ்திபார மனநிலையை நீக்குகிறது. மிகச் சில மனித உறவுகள் பலவருடங்களாக ஒப்புக்கொடுத்தல் மட்டுமல்லாது விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, முடிவிலே உறவினைக் காத்துக்கொள்ளும்படியான தீர்மானம் போன்றவற்றினை தொடருகின்றன. இதுவே விவாகத்தில் உண்மையாயிருக்கிறது.

தேவன் திட்டமிட்ட விவாகம் மனித உறவுகளின் அஸ்திபாரத்தூணாக இருக்கிறது. விவாகத்தினுள் ஒரு குடும்பத்தார் பிறந்துள்ளனர், குடும்பங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, தேசங்கள் வளர்ந்துள்ளன நாகரிகங்கள் பெருகியுள்ளன, மேலும் தேவனோடுள்ள நித்திய வீட்டிற்கென ஆயத்தமாக்கப்பட்டுள்ளன. இது என்றென்றும் உருவாக்கப்பட்டுள்ள மிக முக்கியமான மனிதனுடைய ஸ்தாபனமாயிருக்கிறது. தேவன் இதனுடைய ஸ்தாபகர், மனுஷர்- விவாகரத்தின் மூலம், அல்லது மனநிலை பாதிக்கப்படுவதின் மூலம், உலகத்திறகு ஒத்த நிலை வெளிப்படுகையில் உணர்ச்சி வயப்பட்ட பிரிவினையின் மூலம் வீட்டை அழிப்பதற்கு தீர்மானத்தை உருவாக்குகிறான்- இவைகள் மனுஷருக்காக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய உண்மையான சித்தத்திற்கு விரோதமாக இருக்கின்றன.

நீங்கள், திருமணம் போராட்டத்திற்கு தகுதியானது எனத் தீர்மானித் திருப்பீர்க ளென்றால் திரும்பிச்சென்று உங்களுடைய தீர்மானத்தினை மறுஆய்வு செய்யுங்கள். நீங்கள், உங்களுக்காகவும் உங்களுடைய துணைக்காகவும், விவாகரத்து மற்றும் விவாகமான நிலை-அல்லது யாரோ ஒருவரோடே வருங்கால முறையற்ற விவாகம் போன்றவற்றை தெரிந்து கொள்ளுகின்றீர்கள். இது தேவனால் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது, மேலும் நீங்கள் இப்பேர்பட்ட கீழ்ப்படியாத நிலையில் இரட்சிக்கப்பட முடியாது. விவாகம் கிரியை நடப்பிக்கும் மேலும் இது எவ்வித முயற்சிகள் எடுத்தாலும் மகிமையான சந்தோஷத்தைக் கொண்டுவரும்.

பெண்கள் பகுதி

## திருமணம் போராட்டத்திற்கு தகுதியானதல்ல

**Marriage is not worth the struggle**

*-Betty*



ஆதியிலே, ஆதியாகமம்1 மற்றும் 2-ன்படி, தேவன் வானத்தையும், பூமியையும் மேலும் சகலவித உயிருள்ள விருட்சங்களையும், மிருகங்களையும் மட்டும் சிருஷ்டிக்கவில்லை மாறாக அவர் தம்முடைய சுயசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தம்முடைய சிருஷ்டியை முடிசூட்டினார்: “பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; …….. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் …… இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” (ஆதி.1:26,27; 2:24).

இயேசுவின் ஊழியநாட்களில், அவர் விவாகம் மற்றும் விவாகரத்து குறித்து கேள்வி கேட்கப்பட்டு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்”(மத்.19:4-6).

மோசேயின் கட்டளையின் கீழ் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து விவாகரத்து செய்ய அனுமதிக்கப்பட்டதைக் குறித்து, இயேசு, “உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்”(மத்.19:8,9).புருஷன்/மனைவி உறவின் நெருக்கத்தைப்பற்றிய இன்னொரு விளக்கத்தினை, நாம் எபேசியர்5:22-33-ல் வாசிக்கிறோம், “மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; ……. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து…… அதற்காக ஒப்புக்கொடுத்தார். … அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். … அந்தப்படியே, உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும்



ரட்சிப்பை பெற்றிருக்க கண்டிப்பாக சபையில் இருக்கவேண்டும். வேதவாக்கியமும்கூட உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் பரலோகத்திற்குச் செல்லுவார்கள் எனக்கூறுகிறது. கிறிஸ்து, “…..நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்” (வெளி.2:10) என்றார். யாக்கோபு, “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்” (யாக்.1:12) என்றான். யோவான், ‘ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்” (வெளி.22:14) என்று எழுதினார்.

அதே சமயம் இது மற்றவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்களென சுட்டிக்காண்பிக்கிறதாக இருக்கிறது. இவர்களோடு சாத்தானும் அவனுடைய தூதர்களும், (மத்.25:41), அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களும் (மத்.13:41) மேலும் துன்மார்க்கரும் (1கொரி.6:9,10; கலா.5:19-21) சேர்க்கப்படுவார்கள். வெளிப்படுத்தல் 21:8-ல் நாம், “பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அவருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவர்கள் என்றார்” என வாசிக்கிறோம். மாயக்காரரும் பரலோகத்திற்குச் செல்லமாட்டார்களென நினைவில் கொள்ளுங்கள் (மத்.24:51) மேலும் கடைசியாக, மோசம்போகிறவர்களும் சமயப் பிழையில் நிலைத்திருக்கிறவர்கள் கேடுள்ளவர்களாவார்கள் (2தீமோ.3:13; ரோம.16:17,18).

யார் பரலோகத்தில் இருக்கிறார்கள்? அங்கே தேவன் இருக்கிறார். ஜீவனுள்ள தேவன் வாசஞ்செய்கிற நகரமென பரலோகம் தாமே வர்ணிக்கப்பட்டுள்ளது (எபே.12:22). அங்கே இயேசு கிறிஸ்து இருக்கிறார் (அப்.2:32,33). அங்கே தேவதூதர்கள் இருக்கிறார்கள் (2தெச.1:7-9).

பரலோகம் எதைப் போலிருக்கும்? யோவான் பரலோகத்தைக் குறித்து, “பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்: அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பியது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்; இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன், தாகமாயிருக்கிறவனுக்கு

நான் ஜீவதண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்'' (வெளி.21:1-7) என்று எழுதினார். தொடர்ந்து வாசிக்கையில், யோவான், ''பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும், சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்'' (வெளி.222:1-7) என எழுதுகிறான்.

நிச்சயமாக, நாம் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகம் முழுவதையும் வாசிக்கையில், பரலோகம் பொன்னாலாகிய நகரத்தின் வீதிகளையும் சகலவித இரத்தினங்களினாலும் மற்றும் வச்சிரக்கல்லாலும் ஆன அஸ்திபாரங்களையுடைய நகரத்தின் மதில்களையும் கொண்டிருக்குமென ஆவிக்குள்ளான யோவான் கூறுவதை நாம் அறிந்திருக்கிறோம். யோவான் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தை இவ்வாறான வசனங்களில் ஆரம்பித்தார்: ''சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது'' (வெளி.1:1-3). ஆனபடியினால், மனுஷனாகிய யோவான், இதற்குமுன் ஒரு மனுஷனும் ஒருபோதும் கண்டிராதவைகளைக் காண சக்தியுடையவனாயிருந்தான். பரலோகத்தைக் குறித்தும் அதன் சகல மகிமையைக் குறித்தும் எழுதுவதற்கு, அவன் மனிதனால் புரிந்து கொள்ளத்தக்க வார்த்தைகளிலே எழுதவேண்டியவனாயிருந்தான். ஆனபடியினால், அவன் தான் பார்த்தவற்றை சூசகமான மொழியிலும், அவற்றை இங்கே பூமியிலுள்ள பொருட்களான பொன் மற்றும் விலையுயர்ந்த கற்களோடு ஒப்பிட்டும் அதிகமாக வர்ணித்தார். இவை உண்மையாகவே வர்ணனைக்கும் அப்பாற்பட்டவிதத்தில் மிக அழகுள்ளதாகவும் அற்புதமானதாகவும் இருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகம்



அதிகாரத்தை பின்பற்றுவதன் மூலமாக சபையின் ஆளுகையைக் கெடுத்துப்போடுகின்றன. மேலும் இவைகள் சுயாதீனமான பிராந்திய சபையை புறக்கணிக்கிறதினாலும், வேதாகமத்தில் காணப்படாத அலுவலகங்களை பயன்படுத்துகிறதினாலும், பணிகளின் அர்த்தத்தை மாற்றுகிறதின் மூலமாகவும் (வேதவாக்கியங்களில் உள்ளவைகளை) இவர்கள் சபையின் ஆளுகையை கொடுத்துப்போடுகிறவர்கள்.

**கேள்விகள்**

1. நாம கரண சபைகளில் மனித அதிகாரத்துக்கான புத்தகத்தைக் குறிப்பிடுவது என்ன வார்த்தை? ----------------.

2. வேதவாக்கியங்களெல்லாம் நம்மை எந்த நற்கிரியையும் -------------- ------ என்று 2தீமோ.3:17 உரைக்கிறது.

3. 2யோவான் 9 சொல்கிறது நாம் கிறிஸ்துவின் ------------ ------------- வேண்டும் என்று.

4. எந்த வகையான பிராந்திய சபைகள் வேதாகமத்தில் காணப்படுகின்றன? ----

5. நாம் ------------ ---------------படி போதிக்க வேண்டும் என்று 1பேது.4:11 உரைக்கிறது.

6. வெளி.22:18,19 வசனங்கள் நாம் எதையாகிலும் ---------- அல்லது புத்தகத்தில் ---------- -------------- எதிராக நம்மை எச்சரிக்கிறது.

7. வேதாகமத்தில் காணப்படாத 4 பணிகளைக் குறிப்பிடவும் ---------- ---------- ------------- -----------------

8. நாம கரண சபைகள் கெடுத்து வைத்திருக்கிற 3 வேதாகம பெயர்களைக் குறிப்பிடவும் ---------------- ---------------------- ----------------

9. 1பேது.2:9 சொல்கிறது நாம் ஒரு ------------- ---------------- இருக்கிறோம் என்று.

10. மெய்யான சபையின் அலுவல்கள் மீட்டெடுக்கப்படாவிட்டால், மெய்யான



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001


## நான் யார்? – Who Am I?



- எனக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.
- நான் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தேன்.
- எனக்கு மூன்று குமாரர்கள்.
- என் நாட்களில் ஜலப்பிரளையம் 40 நட்கள் பூமியின்மேல் உண்டானது.
- என் நாட்களில் ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் பிரவாகித்தது.
- தேவன் எங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார்.
- நான் 950 வருஷம் வாழ்ந்தேன்.

நாம் கர்த்தருடைய சபையைக் குறித்த அவருடைய திட்டத்தின் ஒவ்வொரு பாகத்திலும் நிலைத்திருக்கிறது போல சபையின் ஆளுகையைக் குறித்த காரியத்திலும் கிறிஸ்துவின் உபதேசத்தில் நாம் அவசியம் நிலைத்திருக்க வேண்டும். நாம் சபையின் ஆளுகையை குறித்த வேதாகம போதனையில் நாம் நிலைத்திருக்கும்போது, நாம் சுயாதீனமுள்ள பிராந்திய சபைகளை உடையவர்களாக இருப்போம். மனுஷர்கள் இதற்கு அப்பால் மாவட்டங்கள் மற்றும் மதத்தலைவர்களின் சபை என்று சொல்லும்போது அவர்கள் கிறிஸ்துவின் போதனைகளில் நிலைத்திருக்கிறவர்களாக இல்லை. நாமகரண சபைகள் சுயாதீனமுள்ள சபையைத் தாண்டி செல்லும்பொழுது கர்த்தருடைய திட்டத்தைக் கெடுத்திருக்கின்றன.

**3. வேதவாக்கியங்கள் சொல்லாத அலுவலர்கள் அலுவல்களின் பயன்பாடு:** நாம் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க வேண்டும் என்ற 1பேது.4:1 உரைக்கிறது. வேதாகமத்தின் காரியங்களை வேதாகமத்தின் வழிகளில் செய்வதும், வேதாகமத்தின் காரியங்களை வேதாகமத்தின் பெயர்களால் அழைப்பதையும் இது குறிப்பிடுகிறது. தேவனுடைய வர்த்தையுடனே எதையாகிலும் கூட்டுவது அல்லது எதையாகிலும் எடுத்துப்போடுவதற்கு எதிராக வெளி.22:18,19 எச்சரிக்கிறது. இந்த காரணங்களுக்காக கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு பாகமும் வேதாகமத்தை மிகச் சரியாக பின்பற்ற வேண்டும். சபையில் இருக்கிற பணியாளர்கள் அவசியமாக வேதத்திலுள்ள பணியாளர்களைப் போன்றே இருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான நாமகரண சபைகள் வேதவாக்கியங்களின்படி இராத பணிகளையும் பணியாளர்களையும் கொண்டிருக்கின்றன. இந்த பணிகள் மனுஷரால் உருவாக்கப்பட்டவைகளாகவும், வேதாகமத்தில் காணப்படாதவைகளாகவும் இருக்கின்றன. அவைகள் "வினா-விடை போதனா முறை செய்கிறவர்கள்" மற்றும் "பிரதிநிதிகள்", "பிரதான குரு" "போப்" பல பிறபணிகள். இது வேதாகமம் பேசுகிறபடி பேசுகிறதில்லை. இது தேவனுடைய வார்த்தையுடனே கூட்டுவதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் காணப்படாத சகல பணிகளும், பணியாளர்களும் நீக்கப்படும் வரை கர்த்தருடைய சபையானது இன்றைக்கு - பழைய நிலைக்கு மீண்டும் மீட்டுக்கொண்டு வரப்பட முடியாது.

**4. வேதவாக்கியங்களின்படியான அலுவல்களை மாற்றுதல்:** நாமகரண சபைகள் நான்காவது வழியாக மெய்யான சபையின் ஆளுகையை வேதாகமத்தில் காணப்படுகிறபடி இல்லாமல் அதன் பணிகளை மாற்றுகிறபடியால் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது என்னவென்றால் அலுவலுக்கு வேதாகமத்தின் பெயர் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் வேதாகம அர்த்தத்தில் பின்பற்றப்படுகிறதில்லை. இது நாம கரண சபைகளின் கண்காணிகள் (Bishops) விஷயத்தில் உண்மையாய் இருக்கிறது. கண்காணிகள் வேதாகமத்தில் காணப்பட்டாலும், நாம கரண சபைகளின் கண்காணிகள் (Bishops) புதிய ஏற்பாட்டு கண்காணிகளைப் போல் இருக்கிறதில்லை. நாமகரண ஆயர் (Pastor) பற்றிய காரியத்திலும் இதுவே உண்மையாயிருக்கிறது. வேதாகமத்தில் ஆயர்கள் (Pastors) ஒரு பிராந்திய சபைக்கு மேலாக மூப்பர்களாயிருந்தார்கள். நவீன கால சபைகளில் ஆயர் (Pastor) ஒரு பிரசங்கியராக ஒன்று அல்லது அதிகமான சபைகளுக்கு பொறுப்பானவராக இருக்கிறார். பெயர் ஒரே விதமாக இருக்கிறது. மற்றொரு உதாரணம் நாமகரண ஆசாரியர் (Priest) வேதாகமத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு ஆசாரியராயிருக்கிறார் (1பேது.2:5,9). ஆனால் பிரிவினை சபைகளில் ஆசாரியர்கள் ஒரு பிராந்திய சபையிலே விசேஷமான அலுவலர்களாயிருக்கிறார்கள். பின்னும் இம்மாதிரியான பிரிவுகளில் நாம் வேதாகமத்தின்படியான ஒரு பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறதை நாம் காண்கிறோம். ஆனால் வேதவாக்கியங்களின் படியாக இல்லாத ஒரு அர்த்தம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாமகரண சபைகள் மனுஷ



எதைப்போலுள்ளது என வாசித்தபிறகு, ஒருவன் தன் மனதில் அழுத்தப்பட்டு அங்கே போக விருப்பம் கொண்டிருந்தால், இன்னும் ஒரு பகுதி சொல்லப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பரலோகம் ஆயத்தமாக்கப்பட்ட ஜனங்களுக்கென்று ஆயத்தமாக்கபட்ட இடமாயிருக்கிறதென்று சிலர் சொல்லியிருக்கின்றனர். இது தேவனும் அவருடைய ஜனங்களும் என்றென்றும் வாசஞ்செய்யப்போகின்ற இடமாயிருக்கிறது. ஆனபடியினால் மனிதன் இவ்வாழ்வை விட்டு பிரியும்போது உண்மையாகவே அவன் மரிப்பதில்லை. அவன் மாம்சத்தில் மரிக்கிறான், ஆனால் அவனுடைய ஆத்துமா நித்தியநித்தியமாக வாசம்செய்யும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் ஒரு நாளில் என்றென்றும் மரிக்காமலிருக்கின்ற பரலோக வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். இவையெல்லாம் முழுவதும் அறிந்து கொள்ள வரும்போது, நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. ஆனபடியினால் நாம் விசுவாசத்தினால் இதை ஏற்றுக் கொண்டு இது உண்மையான ஒன்றாக மாறும் நேரம் வரைக்கும் உறுதியுடனிருக்கவேண்டும். தேவன் நம்மை வஞ்சிக்கமாட்டாரென்ற முழுநம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஒருபோதும் கண்டிராததும் அல்லது கற்பனை செய்திராததுமான காரியத்தை நமக்கு அருளுவார்.

நீங்கள் பரலோகம் செல்ல விரும்பமாட்டீர்களா? ஒரு நாளில் தேவனோடு வாழ விரும்பமாட்டீர்களா? வாழ்க்கை இப்படியிருக்குமானால் அது எவ்வளவு கோரமானதாயிருக்கும். அங்கே பல பிரச்சனைகளும், தொந்தரவுகளும், தலைவலிகளும் உள்ளன. அங்கே பலவிதமான வேதனைகளும், வலிகளும், துன்பங்களும் உள்ளன. ஆனால் நாம் இவ்வாழ்விற்கு அப்பாற்பட்ட ஒரு சிறந்த உலகத்தை நோக்கும்போது இந்த உலக வாழ்வை எப்படியும் சமாளிக்கமுடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் நீங்கள் கெட்டுப்போன நிலையிலிருக்கிறீர்கள். மேலும் கல்லறைக்கு அப்பால் நம்பிக்கையில்லாவர்களா யிருக்கிறீர்கள். நீங்கள் இதை உணரும் படிக்கும் இதை சரிசெய்து கொள்ள முயற்சி செய்யும்படிக்கும் உங்களுக்காக நான் ஜெபிக்க விரும்புகிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாளில் பரலோகத்திற்குச் செல்லும் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளமுடியும் (மத்.16:16). நீங்கள் இதைச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சிப்பது மட்டுமின்றி, தம்முடைய சபையிலும் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). நீங்கள் இன்னும் காலத்தையும் தருணத்தையும் பெற்றிருக்கையில் இதை நீங்கள் செய்வீர்களென நாங்கள் ஜெபிக்கிறோம்.

**தெரிந்து கொள்ளுவோம்** பெய்ஜிங் (சீனா)

**சீனத்தலைநகர் முன்பு பீகிங் என்று அழைக்கப்பட்டது. இப்போது பெய்ஜிங் என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் 'வடக்கில் அமைந்த நகர்' என்பதாகும்**

*- K.R.K.Ravi Asir*

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



*தற்சோதனை பகுதி - 38*

**38. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதா?**

1. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது
☐ வசன ஆதாரம் ------------------------------------------------
2. தீர்க்கதரிசனத்தை அப்படியே எடுத்துக்கொள்வதில் தவறில்லை
☐ வசன ஆதாரம் ------------------------------------------------
3. மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை ☐ வசனஆதாரம்-
4. தேவனுடைய மனுஷர்கள் தங்கள் ஆவியின் ஏவுதலினால் பேசினார்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------
5. ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபையின் தூதர்கள் ☐ வசனஆதாரம்-
6. ஏழு நட்சத்திரங்களும் நட்சத்திரங்களே ☐ வசன ஆதாரம் -------
7. ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகள் ☐ வசன ஆதாரம்--------
8. ஏழு குத்து விளக்குகளும் குத்துவிளக்குகளே ☐ வசனஆதாரம்-
9. நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது ☐ வசன ஆதாரம் -------
10. பரலோகத்தில் சுரண்டலங்கள் பூமியில் இருப்பது போன்றே இருக்கும் ☐ வசன ---------------------------------------------


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**



**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** Contact Us: 94435 58041

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**






## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -19**

**நாமகரண சபைகள் எவ்வாறு சபையின் ஆளுகையை கெடுத்துப்போடுகிறது**

**வரைகுறிப்பு**

1. **வேதாகம அதிகாரத்திற்கு பதிலாக மனித அதிகாரத்தை பின்பற்றுதல்**
2. **சுயாதீனமுள்ள பிராந்திய சபைக்கு "அப்பால் செல்லுதல்"**
3. **வேதவாக்கியங்கள் சொல்லாத அலுவலர்கள் மற்றும் அலுவல்களின் பயன்பாடு**
4. **வேதவாக்கியங்களின்படியான அலுவல்களை மாற்றுதல்**

**கலந்துரையாடல்**

**1. வேதாகம அதிகாரத்திற்கு பதிலாக மனித அதிகாரத்தை பின்பற்றுதல்:** இந்த பாடத்திலும் அடுத்து வருகின்ற ஒரு பாடத்திலும் சபையின் ஆளுகையானது எவ்வாறு அடிக்கடி கெடுத்துப்போடப்படுகிறது என்பதை நாம் படிக்க விரும்புகிறோம். இப்பொழுதுள்ள பாடத்தில் நாமகரண சபைகள் எவ்வாறு சபையின் ஆளுகையை கெடுத்திருக்கின்றன என்பதை ஆராய்வோம். தொடர்ந்து வருகிற பாடத்தில் சபையின் அமைப்பானது எவ்வாறு கர்த்தருடைய சபையினாலும் அடிக்கடி கெடுத்துப்போடப்படுகிறது என்பதை படிப்போம். நாமகரண சபையின் ஆளுகைக்குள்ளாக சகல கேடுபாடுகளும் வந்திருக்கிறதற்கு பெரிதான காரணம் என்னவென்றால்; அவர்கள் வேதாகம அதிகாரத்திற்குப்பதிலாக மனுஷருடைய அதிகாரத்தை அவர்கள் பின்பற்றுவதாக இருக்கிறது. அவர்களுடைய மிகப்பெரிய தவறு என்னவென்றால் அவர்களுடைய வினா-விடை போதனாமுறைகளை பின்பற்றுவதில் இருக்கிறது. நாமகரணசபைகளின் வினாவிடை போதனா முறைகள் சபையின் ஆளுகை அமைப்பை குறித்த வேதாகம திட்டத்திலிருந்து பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி அங்கீகாரம் செய்கின்றன அவர்களுடைய வினா-விடை போதனா முறைகள் அதிகாரம் உடையவைகளாக பின்பற்றப்படுகிறதினால் மாற்றங்களும், வேற்றுமைகளும் இவ்விதமாக பின்பற்றப்படுகின்றன. மனிதர்களின் வினா-விடை போதனா முறைகள் அதிகாரம் உடையவைகளாக மதிக்கப்படுகிற வகையில் ஜனங்களை மீண்டுமாக சபையின் ஆளுகையை குறித்த மெய்யான திட்டத்திற்கு கொண்டு வருவது என்பது சாத்தியமற்ற காரியமாக இருக்கிறது. வேதவாக்கியங்கள் மட்டுமே மார்க்கத்தில் அங்கீகாரம் உள்ளதாக இருக்கிறபடியால் அவைகள் அவசியம் கனப்படுத்தப்படவேண்டும். அவைகள் ஒரு கிறிஸ்தவனுக்குரிய சகல நற்கிரியைகளுக்கும் நேராக வழிநடத்தி பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2தீமோ.3:17).

**2. சுயாதீனமுள்ள பிராந்திய சபைக்கு "அப்பால் செல்லுதல்".** உண்மையான சபை ஆளுகையை நாமகரண சபைகள் மற்றொரு வழியில் புரட்டி பிராந்திய சபையின் சுய ஆட்சி உரிமையை மதிக்க தவறிவிடுகிறார்கள். கர்த்தருடைய சபையும் ஆளுகைக்கான திட்டத்தில் ஒரு பெரிய விதி முறை என்னவென்றால் ஒவ்வொரு பிராந்திய சபையின் சுயாதீனமாக இருக்கிறது. அநேகம் நாமகரண சபைகள் சுய ஆட்சி இல்லாத பிராந்திய சபைகளை கொண்டவைகளாக இருக்கின்றன. அவர்களுடைய ஆளுகை அமைப்பு என்பது முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. ஆனால் நாம் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு அப்பால் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறோம் (2யோவா.9,10).